81

## தமிழ்நாடு அரசு

**சுருக்கம்** 37201

வீட்டுவசதி - தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம் - அரசு வாடகைக் குடியிருப்புகளில் குடியிருக்கும் அரசு அலுவலர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்ட பின், தொடர்ந்து குடியிருக்க அனுமதி வழங்கப்படுகிறது - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ.3(1)) துறை

அரசாணை (நிலை) எண்.375, நாள்: 6.9.2000.

**பார்க்க:-**

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், சென்னை-5, மாநிலத்தலைவர், மு.நாள் 21.7.2000.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
நயாக் பிரிவு
26 DEC 2017
சென்னை

**ஆணை:-**

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில மாநாடு, 5.8.2000ல் நடைபெற்றபோது, பல்வேறு கோரிக்கைகளில், 49-வது கோரிக்கையாக கீழ்க்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டது:-

"நடைமுறையிலுள்ள அரசாணைப்படி சென்னை மற்றும் சென்னையை சுற்றி 60 கி.மீட்டர்களுக்குள்ளாக மாறுதலில் செல்லும் அரசு அலுவலர்கள், தாம் குடியிருக்கும் அரசுக் குடியிருப்பை காலிசெய்யாமல் தொடர்ந்து குடியிருக்கலாம் என அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாவட்டங்களில் 16 கிலோ மீட்டருக்கு அப்பால் மாறுதலில் செல்லும் அலுவலர்களுக்கு தொடர்ந்து அரசு குடியிருப்பில் வசிக்க அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது. மாவட்ட பிரிவினைகளினால், மாவட்ட எல்லை சுருங்கி விட்ட நிலையில் போக்குவரத்துவசதி பெருகியுள்ள சூழலில் நடைமுறையில் அரசு அலுவலர்களுக்கு பாதகமாக உள்ள இந்த ஆணையை மாற்றி அமைத்து, சென்னையில் பணியாற்றும் அரசு அலுவலர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதைபோல், மாவட்டங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், மாவட்ட எல்லைக்குள் பணிமாறுதல் செய்யப்பட்டாலும் அரசு வாடகை குடியிருப்பில் தொடர்ந்து வசித்திட அனுமதி வழங்க வேண்டும்".

த.பி.பா.

13

2. இக்கோரிக்கையின் மீது முதலமைச்சர் அவர்கள் பாராட்டும்போது கீழ்க்கண்டவாறு அறிவித்தார் :-

"நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி சென்னை மற்றும் சென்னையை சுற்றிய 60 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக பணிமாறுதல்களில் செல்லும் அரசு அலுவலர்கள் தாம் குடியிருந்து வரும் அரசுக் குடியிருப்பை காலிசெய்யாமல் தொடர்ந்து குடியிருக்கலாமென அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாவட்டங்களில் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் பணிமாறுதலில் செல்லும் அலுவலர்களுக்கு தொடர்ந்து அரசுக் குடியிருப்பில் வசிக்க அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது என்று எனது கவனத்திற்கு கோரிக்கை மூலமாகக் கொண்டு வந்துள்ளீர்கள். இனி 16 கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் என்பது 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் என்று உயர்த்தி அறிவிக்கப்படுகிறது."

3. மேற்கண்ட அறிவிப்பிற்கு இணங்க சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் 60 கிலோ மீட்டர் தொலைவிற்குள் பணியிட மாற்றம் செய்யப்படுபவர்கள், அவர்கள் குடியிருக்கும் அரசு வாடகைக் குடியிருப்புகளில் தொடர்ந்து குடியிருக்கவும், இதர மாவட்ட தலைநகர்கள் மற்றும் நகரங்களில் பணியாற்றும் அரசு அலுவலர்கள் 30 கிலோ மீட்டர் தொலைவிற்குள் பணியிட மாற்றம் செய்யப்பட்டால் அவர்கள் குடியிருக்கும் அரசு வாடகை குடியிருப்புகளில் தொடர்ந்து குடியிருக்கவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாணை வெளியிடப்பட்ட நாள்முதல் அமுலுக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அஜய் பட்டாச்சார்யா
அரசு செயலாளர்

பெறுநர்:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை-35.
அனைத்து துறைச் செயலாளர்கள், சென்னை-9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை (சே), சென்னை-9.
முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை-9.
வீட்டுவசதி அமைச்சரின் தனிச்செயலர், சென்னை-9.
வீட்டுவசதி மற்றும் ந.வ. துறை செயலரின் தனிச்செயலர், சென்னை-9.
வீட்டுவசதி மற்றும் ந.வ. (எச்பி.2) (வீ.க.மு.2), (வீ.வ.3(2)) துறை, சென்னை-9.

இ.கோ./உதிரி நகல்.

/ஆணையின்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

பாகா/7.9.